DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 96/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.விஷ்ணு |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.02.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் தெற்கு காவல்நிலையத்தில் சார்புஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.09.2024 தேதி காலை 10.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது மதுவிலக்கு சம்மந்தமாக கிடைக்கபெற்ற ரகசிய தகவலின் படி போலிஸ் பார்ட்டிகளுடன் தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகே சென்றபோது அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த எதிரி எங்களை பார்த்ததும் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர்பெயர் ஆறுமுகம்

த/பெ., வடங்ன் என்றும் அவருடைய சொந்த லாபத்திற்காக விற்பனை செய்வதற்காக 180 மிலிஅளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டில்கள் 10 பாட்டில்கள் வைத்திருந்ததை பிடித்து சாட்சிகள் முதல்நிலை காவலர் 1215 மற்றும் இரண்டாம் நிலை காவலர் 2381 ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆக குறியீடு செயயப்படுகிறது.

3 பி்னினர் எதிரியை காரணம் கூறி கைதுசெய்து வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து 10.30 மணிக்கு நிலைய குற்ற எண்.201/24. u/s 4(1)(C) TNP Act படி வழக்கு பதிவு செய்தேன் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அ.சா.1 கணேஷ், அ.சா.2 ராமச்சந்திரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். எதிரியை நிலைய பிணையில் விடுவித்து எனது விசாரணையை முடித்து எதிரி மீது u/s 4(1)(C) TNP Act படி குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.எதிரி மதுபாட்டில்கள் விற்பனை செய்வதாக யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை ரகசிய தகவல் கிடைத்தது. சம்பவயிடமானது தொண்டி புதிய பேருந்து நிலையம் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் எந்நேரமும் ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். தனிநபர்களை அத்தாட்சி சாட்சியாக இருக்கும்படி நான் கேட்டுகொண்டேனா என்றால் கேட்டேன், ஆனால் யாரும் முன்வரவில்லை. 2,3 நபர்களை கேட்டேன் அவர்கள் முன் வரவில்லை அவர்கள் குறித்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கானது நானே தன்னிச்சயைாக தாக்கல் செய்த வழக்கு என்றும் வழக்கில் விசாரணை அதிகாரி நான் என்றால் சரிதான்.

2. பொதுவாக இயற்கை நீதியின் விதிகளின் படி நானே வழக்கு பதிவுசெய்து அதனை விசாரணை செய்தது தவறு என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்துவிட்டு உயர் அதிகரிகளிடம் அனுமதித்து பெற்றுதான் விசாரித்தேன். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில்களை சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்துவிட்டோம் என்றால் சரிதான். அழித்தல்மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரிதான் மதுபாட்டில்களை தனிநபர் சாட்சிகள் யார் முன்னிலையிலும் அழிக்கவில்லை

என்றால் சரிதான். வழக்கு சொத்துகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். காலி மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களின் வரிசை எண்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்களை புகைப்படம் எடுத்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒருதனி நபர் தனது சொந்த பயன்பாட்டிற்கு 4.5 லிட்டர் வரை மதுபானம் வைத்திருக்கலாம் என்றால் சரிதான். ஆனால் சட்ட விரோதமாக விற்பனை செய்யக்கூடாது . நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றும்புள்ளிவிவர கணக்கிற்காக வேறு விதமாக கைப்பற்றிய மதுபாட்டில்களை வைத்து எதிரி மீதுபொய்யாக வழக்கு பதிவுசெய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.